<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

எ. ம.சா.2 தேதி. 22.07.2025

| MCOP. No. | 01/2022 | | |
|---|---|---|---|
| பெயர் | உதயசூரியன் | த/பெ, | சுந்தரம் |
| வயது | 38 | தொழில் | சட்டமேலாளர் |
| கிராமம் | திருச்சி | தாலுக்கா | திருச்சி |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணியாற்றி வருகிறேன். ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம்அளிக்கிறேன். ஒன்று 1வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 05 BB 3411 TATA ACE வாகனமாகும். அந்த வாகன ஓட்டுநரான சுமன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. அதனால் வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு சோதனை அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விபரம் மேற்கண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது .அந்த அறிக்கையின் நகல் **எமசாஆ1** ஆகும். மேலும், வாகனத்தை ஓட்டிச்சென்ற ஓட்டுநர் சுமன் 16 வயது இளவர் ஆவார். ஓட்டுனர் உரிமம் இல்லாமல் இளவர் வாகனத்தை இயக்கியது காப்பீடு விதிமுறை மீறல் என்பதால் வாகனத்தின் 1ம் எதிர்மனுதாரர் தான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். 2வது எதிர்மனுதாரரைப் பொறுத்து வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும். மேற்கண்ட வாகனத்தின் பாலிசி மற்றும் சட்டத்திட்டங்களின் நகல் **எமசாஆ2** ஆகும். மேற்கண்ட ஓட்டுநர் சுமனின் ஆதார் அட்டை நகல் **எமசாஆ3** ஆகும்.

**மறுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எங்களிடம் காப்பீடுசெய்யப்பட்டுள்ளத வாகனத்தின் ஓட்டுனர் மீது தான் காவல் துறையினர் வழக்கு பதிவுசெய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதனால் விபத்திற்கு காரணம் வாகனத்தின் ஓட்டனர் என்பதால் எங்கள் நிறுவனம் தான் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்துக்கு மனுதாரரின் பங்களிப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.